<u>குழித்துறை நகர்மன்றத்தின் சாதாரணக்கூட்டம் 30-05-2023 செவ்வாய் கிழமை காலை 11.00 மணிக்கு நடைபெறவுள்ளது. தாங்கள் தவறாது கலந்து கொள்ள கேட்டுக்கொள்ளப்படுகிறது.</u>

<u>நகர் மன்ற தலைவர் திரு.பொன். ஆசைத்தம்பி அவர்கள் கொண்டு வரும் தீர்மானம்</u>

1) மறைந்த முன்னாள் நகர்மன்ற உறுப்பினர் திரு.பா. ஜாண்பிரிட்டோ அவர்களின் மறைவிற்கு இரங்கல் தெரிவிக்கும் தீர்மானம்.

தீர்மானம் எண் 507 - அனுமதிக்கப்பட்டது

<u>7-வது வார்டு நகர்மன்ற உறுப்பினர் திருமதி.U.R. விஜயலெட்சுமி கொண்டு வரும் தீர்மானம்</u>

1) குழித்துறை நீதிமன்ற சாலையில் உள்ள அரசு பெண்கள் நடுநிலைப்பள்ளி அருகிலுள்ள மழைநீர் ஒடையை தபால் நிலைய சந்திப்பு வரை புனரமைத்து மழைநீர் தேங்காதவாறு ஆழப்படுத்த மன்றம் தீர்மானிக்கலாம்.

   தீர்மானம் எண் 508 (1) - தீர்மானிக்கப்பட்டது

2) நீதிமன்ற சாலை ஓரம் உள்ள ஹோட்டல் ஐயப்பன் கடை முன் உள்ள மழைநீர் ஒடையை பயணிகள் நிழலகம் வரை ஆழப்படுத்தி புனரமைக்க மன்றம் தீர்மானிக்கலாம்.

   தீர்மானம் எண் 508 (2) - தீர்மானிக்கப்பட்டது

3) நீதிமன்ற பயணிகள் நிழலகத்தின் எதிர் பக்கம் உள்ள கோபன் ஹோட்டல் பக்கம் அமைந்துள்ள மழைநீர் ஒடையை ஆழப்படுத்தி அஜீதா வீடுவரை புரைமைத்து மன்றம் தீர்மானிக்கலாம்.

   தீர்மானம் எண் 508 (3) - தீர்மானிக்கப்பட்டது

<u>பொருள் எண்.1</u>

இந்நகராட்சிக்கு சொந்தமான வாகனம் TN.75AL.6628 எண் கொண்ட பொதுசுகாதார வாகனத்திற்கு இஞ்சியின் செட், டைம்மிஸ் செயின், தண்ணீர் பம்பு ஆகிய பழுதுகள் ஏற்பட்டுள்ளதால் வாகனத்தை ஒட்ட முடியாத நிலை ஏற்பட்டுள்ளது. தற்போது பொது சுகாதாரப்பணிக்கு மேற்படி வாகனம் அவசர அவசியமாக இருப்பதால் வாகனத்தை சரி செய்ய விலைப்புள்ளி கோரியதில் வரப்பெற்ற மூன்று விலைப்புள்ளிகள் விபரம் கீழ்வருமாறு உள்ளது.

1) அக்ஷயா மோட்டார்ஸ் - ரூ.31978 GST உட்பட
2) மாதவ மோட்டார்ஸ் - ரூ.35341 GST உட்பட
3) கணேஷ் மோட்டார்ஸ் - ரூ.39447 GST உட்பட

வரப்பெற்ற மூன்று விலைப்புள்ளிகளிலும் குறைந்த விலைப்புள்ளி கொடுத்துள்ள அக்ஷயா மோட்டார்ஸ் என்ற நிறுவனத்தின் விலைப்புள்ளியினை ஏற்று வேலை உத்தரவு வழங்குவதற்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

அ.கு. - மேற்படி வாகனத்தில் ஏற்பட்டுள்ள பழுதுகளை உடன் சரி செய்யவும் பொது சுகாதார பணிக்கு பாதிப்பு ஏற்படாத வண்ணம் மன்றத் தலைவரின் முன் அனுமதி பெற்று வேலை உத்தரவு வழங்கியதை மன்றம் ஏற்கலாம்.

தீர்மானம் எண் 509 - அனுமதிக்கப்பட்டது

<u>பொருள் எண்.2</u>

குழித்துறை நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.6-ல் அமைந்துள்ள மேட்டுகிராமம் முதல் கீழ்கிராமம் பகுதியில் EB Post No.52-லிருந்து சுமார் 65 மீட்டார் நீளத்திற்கு கழிவுநீர் ஒடை பழுதடைந்து நீர்தேங்கி சுகாதாரக்கேடு விளையும் வண்ணம் உள்ளதை சரி செய்ய நகர்மன்றத் தீர்மானம் எண்.121, நாள் 20-05-2022-ல் அனுமதி அளித்துள்ளது. அதன்படி மேற்படி பணிக்கு 24-03-2023-ல் ஒப்பந்தப்புள்ளி கோரியதின் விபரம் கீழ்வருமாறு உள்ளது.

| வ.எண். | ஒப்பந்ததாரர் பெயர் | மதிப்பீட்டுத்தொகை ரூபாய் |
|---|---|---|
| 1 | திரு.P. ஜெயபிரகாஷ் | 0.01% மதிப்பீட்டை விட குறைவு |
| 2 | திரு.P. ஜெயச்சந்திரன் | 0.67% மதிப்பீட்டை விட அதிகம் |

வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளியில் ஒப்பந்ததாரர் திரு.P. ஜெயபிரகாஷ் என்பவர் மதிப்பீட்டை விட 0.01% குறைவாக கொடுத்துள்ளார். மேற்படி பணிக்கு மன்றத் தலைவரின் முன் அனுமதி பெற்று வேலை உத்தரவு வழங்கியதை மன்றம் அனுமதிக்கலாம்.

அ.கு.- மன்றத்தின் அனுமதிக்கு.
ந.க.எண்.1417/2023/இ1.

தீர்மானம் எண் 510 - அனுமதிக்கப்பட்டது

<u>பொருள் எண்.3</u>

குழித்துறை நகராட்சியில் திடக்கழிவு மேலாண்மை வெளிக்கொணர்வு முகமை (Out Sourcing) மூலம் பணியாளர்களை பணியமர்த்துவதில் ரூ.138.99 இலட்சம் மதிப்பீட்டில் நிர்வாக அனுமதி பெற்றுள்ளதைனடிப்படையில் நகர் மன்றத் தீர்மானம் எண்.387, நாள் 03-01-2023-ன்படி மன்றம் ஒப்புதல் அளித்துள்ளது. அதன்படி 24-03-2023-ல் ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டது. மேற்படி ஒப்பந்தப்புள்ளியில் 4 ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெற்றது. வரப்பெற்ற ஒப்பந்தப் புள்ளிகளை கூர்ந்தாய்வு செய்ததில் தகுதி வாய்ந்த ஒப்பந்தப்புள்ளிகள் இல்லாததால் மீண்டும் 18-04-2023-ல் மறு ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டது. 18-04-2023 அன்று நடைபெற்ற ஒப்பந்தப்புள்ளியில் 3 ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெற்றது. அதன் விபரம் கீழ்வருமாறு உள்ளது.

1) பொன்ராஜ் எண்டர்பிரைசஸ், சென்னை
2) KRS Service, Chennai
3) Southern Solid Waste Management, முளகுமூடு

வரப்பெற்ற 3 ஒப்பந்தப்புள்ளியில் பொன்ராஜ் எண்டர்பிரைசஸ் மற்றும் KRS Service ஆகியோர் மட்டும் தொழில் நுட்ப ரீதியாக தகுதி பெற்றுள்ளார். Southern Solid Waste Management ஒப்பந்தப்புள்ளியில் கலந்து கொள்வதற்கான

வரைவோலை அலுவலகத்தில் ஒப்படைக்கவில்லை. ஆகவே தகுதி வாய்ந்த இரண்டு ஒப்பந்ததாரர்களின் Price Bid-ஐ விலைப்புள்ளியினை 02-05-2023 அன்று திறக்கப்பட்டதில் ஒப்பந்ததாரர் திரு.எஸ். பொன்ராஜ் என்பவர் மதிப்பீட்டை விட 1% குறைவாகவும் மற்றும் KRS Service, Chennai என்பவர் 18.85% மதிப்பீட்டை விட கூடுதலாகவும் கொடுத்துள்ளார். ஆகவே குறைவாக விலைப்புள்ளி கொடுத்துள்ள ஒப்பந்ததாரர் திரு.எஸ். பொன்ராஜ் என்பவரின் ஒப்பந்தப் புள்ளியினை ஏற்று Performance security Deposit ஆக ரூ.2,78,000/- (2%) செலுத்தியுள்ளதால் அன்னாருக்கு வேலை உத்தரவு வழங்கலாம்.

அ.கு.- நகர்மன்றத் தலைவரின் முன் அனுமதி பெற்று மதிப்பீட்டை விட 1% குறைவாக கொடுத்துள்ள ஒப்பந்ததாரர் திரு.எஸ். பொன்ராஜ் என்பவருக்கு (LOA) Letter of acceptance வழங்கியதை மன்றம் அனுமதிக்கலாம்.

ந.க.எண்.134/2023/H1

தீர்மானம் எண் 511 - அனுமதிக்கப்பட்டது

<u>பொருள் எண்.4</u>

குழித்துறை நகராட்சிக்கு 2021-2022-ம் ஆண்டு தணிக்கை மேற்கொள்ளப்பட்டு அதற்கான அறிக்கை, புத்தகம் பைண்டிங் மற்றும் சிடி கட்டணம் உட்பட ரூ.16680/- கேட்டு ரசீது வரப்பெற்றுள்ளது. அதனை வழங்க மன்ற அனுமதிக்கு.

அ.கு. - அனுமதிக்கலாம்.

ந.க.எண்.1241/2023/பி1.

தீர்மானம் எண் 512 - அனுமதிக்கப்பட்டது

<u>பொருள் எண்.5</u>

குழித்துறை நகராட்சியின்கீழ் ஆரம்ப சுகாதார மையம் கட்டும் இடத்தில் இடையூறாக நிற்கும் 9 மரங்கள் (புளிவாகை-3, மஞ்சணாத்தி-1, வேம்பு-1, பாதாம்-1, மஞ்சாடி1, நாரந்தி-1, உதிமரம்-1) 17-05-2023-ல் பொது ஏலம் விடப்பட்டதில் கீழ்க்கண்ட நபர்கள் கலந்து கொண்டனார். அதன் விபரம் கீழ்வருமாறு உள்ளது.

1) திரு. அனில்குமார்,
   பாலவிளை - உச்ச ஏலக்கேள்வியாக ரூ.20350/- கேட்டுள்ளார்
2) திரு. ஆல்பர்ட் இராஜ்,
   S.T.மங்காடு - உச்ச ஏலக்கேள்வியாக ரூ.20400/- கேட்டுள்ளார்

வரப்பெற்ற இரண்டு ஏலத்தாரர்களிலும் திரு. ஆல்பர்ட் இராஜ் என்பவர் உச்ச ஏலக்கேள்வியாக ரூ20400/-ஐ கேட்டுள்ளார். அதை மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

அ.கு.- மன்றம் பார்வையிட்டு முடிவு செய்யலாம்.

ந.க.எண்.43/2022/இ1.

தீர்மானம் எண் 513 - அனுமதிக்கப்பட்டது

<u>பொருள் எண்.6</u>

குழித்துறை நகராட்சி நிதியாண்டு 2023-2024-ற்கான சொத்துவரியினை 30-04-2023-க்குள் செலுத்துபவர்களுக்கு 5% அல்லது அதிகப்பட்சமாக ரூ.5000/- ஊக்கத்தொகை வழங்கப்படும் என்ற அறிவிப்பினை 3000 எண்ணம் அறிவிப்பு சீட்டு மூலம் அச்சிடப்பட்டு விளம்பரம் செய்யப்பட்ட வகைக்கு ரூ.2250/- Dharashini Global Hub என்ற நிறுவனத்திடம் இருந்து பட்டியல் தொகை வரப்பெற்றுள்ளது. மேற்படி தொகையினை நகராட்சி பொது நிதியில் இருந்து வழங்கிட மன்றத்தின் அனுமதிக்கு.

அ.கு.- மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும்.
ந.க.எண்.969/2022/அ1.
தீர்மானம் எண் 514 - அனுமதிக்கப்பட்டது

<u>பொருள் எண்.7</u>

அம்மா உணவக பயன்பாட்டில் உள்ள Billing Machince பழுதடைந்து இயங்காத நிலை ஏற்பட்ட காரணத்தினால் அவ் இயந்திரத்தினை Vimal scales services, Kanothu Konam என்ற நிறுவனத்தின் மூலம் சரி செய்யப்பட்ட வகைக்கு ரூ.1750/- பட்டியல் தொகை வரப்பெற்றுள்ளது. மேற்படி தொகையினை வருவாய் நிதியில் இருந்து வழங்கிட மன்றத்தின் அனுமதிக்கு.

அ.கு.- மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும்.
ந.க.எண்.1221/2015/அ1.
தீர்மானம் எண் 515 - அனுமதிக்கப்பட்டது

<u>பொருள் எண்.8</u>

குழித்துறை நகராட்சியில் தூய்மை இந்தியா திட்டத்தின்கீழ் திறந்தவெளியில் மலம் கழித்தலற்ற நகராட்சியாக அறிவிக்கப்பட்டு (ODF) தொடர்ந்து அத்தகைய நிலையை கடைப்பிடிக்கப்பட்டு வருகிறது. அதன் ஒரு பகுதியாக நகராட்சி பகுதியில் திறந்த வெளியில் மலம் கழித்தலற்ற நிலை தொடர்ந்து பராமரிக்கப்பட்டு வருகிறது என்ற விளம்பரத்தை 03-05-2023-ம் தேதி தினமலர் தினசரி செய்தி நாளிதழில் விளம்பரம் செய்யப்பட்டுள்ளது.

தினமலர் - ரூ.10,017/-

மேற்படி வரப்பெற்ற தொகையினை நகராட்சி பொது நிதியிலிருந்து வழங்க மன்றத்தின் அனுமதிக்கு.

அ.கு.- மன்றம் அனுமதி வழங்கலாம்.
ந.க.எண்.3767/2022/H1.
தீர்மானம் எண் 516 - அனுமதிக்கப்பட்டது

பொருள் எண்.9

இந்நகராட்சியின் ஆணையாளர் அறையிலுள்ள Table பழுதுபார்த்த வகைக்கு ரூ.3888/-யும் மற்றும் இந்நகராட்சியின் பொறியாளர் பிரிவில் உள்ள AC பழுது பார்த்த வகைக்கு ரூ.3978/- ஆக மொத்தம் பழுது நீக்கம் செய்யப்பட்ட பட்டியல் தொகை ரூ7866/-ஐ இந்நகராட்சி ஒப்பந்ததாரர் திரு.ஆர். ராஜசேகரன் என்பவருக்கு வழங்கிடவும் மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

அ.கு.:- அத்தியாவசிய பணிக்களுக்காக செலவுகள் மேற்கொண்டுள்ளதால் இந்நகராட்சி ஒப்பந்ததாரருக்கு செலவின தொகை வழங்கலாம்.

ந.க.எண்.3256/2022/H1.

தீர்மானம் எண் 517 - அனுமதிக்கப்பட்டது

பொருள் எண்.10

இந்நகராட்சிக்கு சொந்தமான பொது சுகாதாரப்பிரிவு வாகனம் TN.75P1813-க்கு 2023-ம் ஆண்டிற்கு தகுதி சான்று பெற வேண்டியுள்ளதால் வாகனத்தில் ஏற்பட்டுள்ள பழுதுகளை சரி செய்ய நகர்மன்றத் தீர்மானம் எண்.505, நாள் 28-04-2023-ல் மதிப்பீடு தொகை ரூ.90,000/-க்கு ஒப்புதல் பெறப்பட்டுள்ளது. தற்போது மேற்படி வாகனத்திற்கு பழுதுகள் சரி செய்ய மதிப்பீடு தயார் செய்யப்பட்டதில் ரூ.1,33,000/-ம் வரப்பெற்றுள்ளது. எனவே கூடுதலாக தொகைக்கு ரூ.43,000/-க்கு மன்றத்தின் அனுமதி பெற்று மொத்த தொகை ரூ.1,33,000/- ஒப்பந்தப்புள்ளி கோர மன்றத்தின் அனுமதிக்கு.

அ.கு.:- TN.75P1813-க்கு 2023-ம் ஆண்டிற்கு FC வேலை செய்ய வேண்டியிருப்பதாலும், பொதுசுகாதாரப் பணியினை கருத்தில் கொண்டு மன்றத்தலைவரின் முன் அனுமதி பெற்று 23-05-2023-ல் ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதை மன்றம் ஒப்புக்கொள்ளலாம்.

ந.க.எண்.2795/2017/இ1.

தீர்மானம் எண் 518 - அனுமதிக்கப்பட்டது

பொருள் எண்.11

98-வது வாவுபலி பொருட்காட்சி தொடர்பான ஏல நிபந்தனைகள்

| வ.எண் | குத்தகை உரிமம் |
|---|---|
| 1 | நகராட்சி குறிப்பிடும் இடத்தில் மட்டும் பக்கக் காட்சி அமைத்து நடத்தும் உரிமம் |
| 2 | பொருட்காட்சி திடலில் நகராட்சி குறிப்பிடும் இடத்தில் ஒலி பெருக்கியில் மட்டும் விளம்பரம் செய்யும் உரிமம் |
| 3 | நகராட்சி குறிப்பிடும் இடத்தில் ஐஸ் மற்றும் ஐஸ்கிரீம் மட்டும் விற்பனை செய்யும் உரிமம் |
| 4 | நகராட்சி குறிப்பிடும் இடத்தில் உணவு விடுதி நடத்தும் உரிமம் |
| 5 | நகராட்சி குறிப்பிடும் இடத்தில் அப்பளம் பஜ்ஜி கடை நடத்தும் உரிமம் |
| 6 | நகராட்சி குறிப்பிடும் இடத்தில் பாப்கான் விற்பனை செய்யும் உரிமம் |
| 7 | நகராட்சி குறிப்பிடும் இடத்தில் பானிபூரி விற்பனை செய்யும் உரிமம் |

| | |
|---|---|
| 8 | பொருட்காட்சி திடலுக்கு வெளியில், தபால் நிலையம் முன்பக்கம் உள்ள 11 கடைகள் அமைத்து விற்பனை செய்யும் உரிமம் கடை 1-ன் அளவு 7'x 5' |
| 9 | பொருட்காட்சி திடலுக்கு வெளியில், பொதுப்பணி துறை பக்கம் 9 கடைகள் அமைத்து விற்பனை செய்யும் உரிமம் கடை 1-ன் அளவு 7' x 6' |
| 10 | வேலுத்தம்பி திடலில் அமைக்கப்பட்டுள்ள 20 கடைகள் அமைத்து விற்பனை செய்யும் உரிமம் கடை 1-ன் அளவு 8'x 6' |
| 11 | பொருட்காட்சி திடலுக்குள் உள்ள 30 கடைகள் அமைத்து விற்பனை செய்யும் உரிமம் கடை 1-ன் அளவு 10'x 9' |

<u>மேற்கண்ட அனைத்து இனங்களுக்கும் பொது நிபந்தனைகள்</u>

குழித்துறை நகராட்சியால் ஆண்டுதோறும் ஆடி அமாவசையை முன்னிட்டு நகராட்சியால் நடத்தப்படும் வாவுபலி பொருட்காட்சியை நடத்திட நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (ந.நி.3) துறை அரசு ஆணை எண்.34, நாள் 22-06-2000-ன்படி இப்பொருட்காட்சியை ஆண்டுதோறும் நடத்துவதற்கு நிரந்தர அனுமதி குழித்துறை நகராட்சிக்கு வழங்கப்பட்டதின்படி 98-வது வாவுபலி பொருட்காட்சி 03-08-2023 முதல் 22-08-2023 முடிய 20 தினங்கள் நடத்துவதற்கு முடிவு செய்யப்பட்டு கீழ்கண்ட நிபந்தனைகள் பேரில் நடத்திட தீர்மானிக்கப்பட்டது.

1) வாவுபலி பொருட்காட்சி ஏலத்தில் கலந்துக் கொள்பவர்கள் விண்ணப்ப படிவ கட்டணம் ரூ.5000/- செலுத்தி பெற்றுக் கொள்ள வேண்டும்.
2) ஏலத்தில் கலந்துக் கொள்பவர்கள் கடவு சீட்டு அளவிலான புகைப்படம் மற்றும் ஆதார் அடையாள அட்டை பான்கார்டு மற்றும் கைபேசி, தொலைபேசி எண் இணைத்திட வேண்டும்.
3) விண்ணப்பத்தில் விண்ணப்பம் பெற்ற நபரின் புகைப்படம் இணைத்து ஏலத்தில் கலந்துக் கொள்ள வேண்டும். எக்காரணம் கொண்டும் மாற்று நபர் ஏலத்தில் கலந்துக் கொள்ள அனுமதிக்கப்பட மாட்டாது. ஏலத்தில் கலந்து கொள்பவர்கள் பெயரில் நகராட்சியில் வரி மற்றும் வரியில்லா இனங்களில் நிலுவையிருப்பின் வரியினை செலுத்தி ஏலத்தில் கலந்துக் கொள்ள வேண்டும். வரி நிலுவை இருந்தால் ஏலத்தில் கலந்துக் கொள்ள அனுமதிக்கப்பட மாட்டாது. வரி மற்றும் வரியில்லா இனங்கள் மீது நிலுவை இல்லை என தடையில்லா சான்று இணைக்க வேண்டும்.
4) ஏலத்தை முடிவு செய்து மன்றம் ஒப்புதல் அளித்த பின்புதான் உத்தரவு வழங்கப்படும். உத்தரவுப் பெற்றுக் கொண்ட 3 தினங்களுக்குள் குத்தகை தொகை முழுவதும் தொகை மற்றும் வரிகள் உட்பட நகராட்சி கஜனாவில் செலுத்தப்பட வேண்டும். தவறினால் உரிமம் ரத்து செய்யப்பட்டு வைப்பு தொகை பறிமுதல் செய்யப்பட்டு மறுஏலம் விடப்படும்.
5) ஏலம்/ ஒப்பந்தப்புள்ளியை நிர்வாக காரணத்தால்ஒத்திவைக்கவோ அல்லது வேறு ஒருதேதிக்கு மாற்றி வைக்கவோ ஆணையருக்கு முழு அதிகாரம் உள்ளது.

6) ஏலம் / ஒப்பந்தப்புள்ளி உறுதி செய்து உத்தரவு வழங்கும்போது உரிமம் பெற்றவர் ரூ.100/- மதிப்புள்ள முத்திரைத்தாளில் ஒப்பந்தப்பத்திரம் எழுதிக் கொடுக்கப்பட வேண்டும்.

7) நகராட்சியிடமோ, வேறு துறையினரிடமோ பெற வேண்டிய உரிமம் மற்றும் செலுத்த வேண்டிய உரிமம் கட்டணம் மற்றும் வரிகளை உரிமம் பெற்றவர் தனது சொந்த செலவில் செலுத்தி ரசீது பெற்றுக் கொள்ளப்பட வேண்டும்.

8) இயற்கையின் சீற்றத்தால் ஏற்படும் புயல், வெள்ளப்பெருக்கம்/ தீயினால் ஏற்படும் இழப்பு, அரசால் பிறப்பிக்கப்படும் அவர கால கட்டுபாடுகளுக்கும், ஏற்படும் இழப்புகளுக்கு உரிமம் பெற்றவரே பொறுப்பாவர், இதில் நகராட்சியால் எந்தவித இழப்பும் வழங்கப்பட மாட்டாது.

9) நகராட்சி அனுமதியுடன் பொருட்காட்சி நடத்த அனுமதி பெற்றவர் தங்கள் சொந்த செலவில் மின் இணைப்பு பெற்று அதற்கான மின் கட்டணத்தை மின்சார வாரியத்திற்கும் தடுப்பு மற்றும் மீட்புப் பணிகள் மேற்கொள்ள ஏற்படும் செலவினத்தை தீயணைப்பு துறைக்கும் செலுத்தி உரிய ரசீது பெற்று அதன் விவரம் நகராட்சியில் தெரிவிக்கப்பட வேண்டும்.

10) ரிக்கார்டு டான்ஸ், சூதாட்டம், திறமை விளையாட்டு மற்றும் அபாயகரமான பொது மக்களுக்கும் பொருட்காட்சிக்கும் தீங்குவிளைவிக்கக் கூடிய எந்தவொரு இனங்களையும் கண்டிப்பாக பொருட்காட்சி திடலுக்குள்ளும், வெளியிலும் அனுமதிக்கப்பட கூடாது.

11) நகராட்சியால் வழங்கப்படும் வரைபடத்தின் அடிப்படையில் பக்கக்காட்சி மற்றும் கடைகள் அமைக்கப்பட வேண்டும்.

12) நகராட்சி குறிப்பிடும் இடத்தில் மட்டும் பக்கக் காட்சி அமைத்து நடத்தப்பட வேண்டும்.

13) பக்கக்காட்சி நடத்தும் இடத்தில் பொருட்சேதம், உயிர்சேதம் ஏற்பட்டால் குத்தகைதாரர் தனது சொந்த செலவில் இழப்பீடு வழங்க வேண்டும்.

14) பக்கக்காட்சி எடுக்கும் உரிமைதாரர் நகராட்சி குறிப்பிடும் இடத்தில் வரைபடத்தின்படி கபடி நடத்த 50'x50' இடம் விட்டுதான் அனைத்து பக்கக்காட்சி இனங்களும் அமைக்கப்பட வேண்டும்.

15) வி.எல்.சி. திருமண மண்டபத்தில் கலை நிகழ்ச்சிகள் நடைபெறும் போதும் கபடி போட்டி நடைபெறும் போதும் ஒலிபெருக்கி மூலம் விளம்பரமும் பக்கக்காட்சி விளம்பரமும் கண்டிப்பாக செய்யக்கூடாது. கபடிப்போட்டிக்கான இடத்தில் பக்கக்காட்சி அமைக்ககூடாது.

16) குத்தகை இனங்களுக்கு மத்திய, மாநில அரசுகளால் அவ்வப்போது அறிவிக்கும் நிபந்தனைகள் மற்றும் வரிகள் செலுத்திட நேரும் பட்சத்தில் உரிமதாரர் முழு பொறுப்பு ஏற்க வேண்டும்.

17) பறவைகள் அல்லது மிருகங்கள் மற்றும் சூதாட்டம், ரிக்கார்டு டான்ஸ் போன்ற பொழுதுபோக்கு அம்சங்கள் நடத்த அனுமதிக்க கூடாது.
18) கட்சி சின்னங்களோ கொடிகளோ மதசம்மந்தமானவை குறித்த பிரச்சாரங்களோ நேரடியாகவோ அல்லது மறைமுகமாகவோ எக்காரணம் கொண்டும் அனுமதிக்கப்பட மாட்டாது.
19) பொருட்காட்சி திடலுக்கு வெளியில் எந்தவொரு பக்கக்காட்சியோ, படகுபோக்குவரத்தோ அமைக்க அனுமதி கிடையாது.
20) பக்கக்காட்சி அமைப்பவர் தீதடுப்பு துறைச் சான்று மற்றும் பொதுப்பணித்துறையிடம் பக்கக்காட்சி பொருட்களுக்கான உறுதி சான்று (Stability Certificate) தனது சொந்த செலவில் பெற்றுக் கொள்ள வேண்டும். உறுதி சான்று பெற்ற விவரம் நகராட்சிக்கு தெரிவிக்கப்பட வேண்டும்.
21) பொருட்காட்சி திடலுக்குள் ஏலத்தில் விடப்பட்ட இனங்களை தவிர வேறு வியாபாரம் செய்யக்கூடாது
22) பொருட்காட்சி திடலில் அமைக்கப்பட்டுள்ள ஒலி பெருக்கியில் மட்டும் விளம்பரம் செய்ய வேண்டும்.
23) நகராட்சி அனுமதியின்றி விளம்பரம் பேனர்கள், தட்டி, போர்டுகள் வைக்க கூடாது.
24) பொருட்காட்சி துவக்க விழா மற்றும் நிறைவு விழா, பொருட்காட்சி திடலில் கபடி போட்டி நடத்துதல், பரிசு பொருட்கள் வழங்கல் புகைப்படம் எடுத்தல் போன்றவை நகராட்சியை சார்ந்தது.
25) பொருட்காட்சி திடலில் அமைந்துள்ள வி.எல்.சி. மண்டபத்தில் நடத்தப்படும் கலை மற்றும் கலாச்சார நிகழ்ச்சிகளுக்கு நகராட்சியிடம் இருந்து நேரடியாக அனுமதி பெற வேண்டும்.
26) பொருட்காட்சி திடலில் தேவையான இடங்களில் சென்டிறிங் அடித்தல், மணல் நிரப்புதல், ஒலி, ஒளி அமைத்தல், கண்காணிப்புகேமரா பொருத்துதல் மற்றும் நுழைவு வாயில் அலங்காரம், 4 இடங்களில் ஆர்ச் மற்றும் குழித்துறை சந்திப்பு, வெட்டுவெந்நி, திருத்துவபுரம், பம்மம் தேசிய நெடுஞ்சாலையின் இருபுறமும் குழல்விளக்கு அமைத்தல் போன்ற பணிகளை வாவுபலி பக்கக்காட்சி உரிமதாரரே தங்கள் சொந்த செலவில் செய்து கொள்ள வேண்டும்.
27) தபால் அலுவலகம் முன்னால் உள்ள கடை 11-ம், வேலுத்தம்பி திடலில் உள்ள கடைகள் 20-ம், பொதுப்பணித்துறை பக்கம் உள்ள கடைகள் 9-ம் பொருட்காட்சி திடலுக்கு கீழ்பகுதியில் உள்ள நிரந்தரமான 12 அரசு ஸ்டால்களும், பொருட்காட்சி திடலுக்குள் உள்ள 30 கடைகளும், பொருட்காட்சி திடலுக்குள் கீழ்பக்கம் உள்ள நிரந்தரமான அரசு ஸ்டால்களும், வடக்கு பக்கம் பானிபூரியும் அதை ஒட்டி பாப்கான் சட்டமன்ற அலுவலகம் மேற்குப் பகுதியில் காட்சி கூடமும், இடைப்பட்ட பகுதியில் நகராட்சி அரங்கம் மற்றும் இலாகாக்களின் அரங்கமும் அதனை தொடர்ந்து ஐஸ்கிரீம் ஸ்டாலும் அதனை தொடர்ந்து

கூல்டிரிங்ஸ் கடை மற்றும் காவலர் அரங்கும், பொருட்காட்சி திடலுக்கு வெளியே செல்லும் பக்கத்தில் ஹோட்டலும், அதனை ஒட்டி அப்பளபஜ்ஜி கடையும் எஞ்சிய பகுதியில் பக்கக்காட்சியும் இடம் பெறும் அனைத்து கடைகளும் அந்தந்த இடங்களில் அமைத்து கொள்ள வேண்டும்.

28) குத்தகை இனம் வரிசை எண்.3 பொருட்காட்சி திடலில் நகராட்சியால் குறிப்பிடும் இடத்தில் ஒலிபெருக்கி வைத்து விளம்பரம் செய்ய வேண்டும். தேவையற்ற, அருவருக்கதக்க விளம்பரங்கள் செய்திட அனுமதி இல்லை. வாவுபலி பொருட்காட்சியில் குத்தகைதாரருக்கு நகராட்சியால் அனுமதிக்கப்பட்ட இடங்களில் அனுமதிக்கப்பட்ட அளவுகளில் குறிப்பிடப்பட்ட கடைகளில் மட்டுமே வசூல் செய்யப்பட வேண்டும்.

29) பொருட்காட்சி திடலிலிருந்து வெளியே செல்லும் போது வலதுபுறம் தீயணைப்பு துறை செயல்படும்.

30) மேற்கண்ட குத்தகை இனங்களில் ஏலத்தொகை (அ) ஒப்பந்தப்புள்ளி கேள்விக்கு மேல் கோர விருப்பமுள்ளவர்கள் ஏலம் முடிந்த 24 மணி நேரத்திற்குள் உயர்ந்த ஏலத்தொகையினை 100% முழுமையாக ரொக்கமாக நகராட்சி கருவூலகத்தில் செலுத்தி எழுத்து மூலம் தெரிவிக்க வேண்டும். இவ்வாறு முழு தொகையினையும் செலுத்தி எழுத்து மூலம் தெரிவிக்கும் பட்சத்தில் தங்களின் மனுவினை பரிசீலனைக்கு எடுத்துக் கொள்ளப்படும்.

31) நகராட்சிக்கு சொந்தமான குத்தகை இனங்களில் பாக்கி வைத்து இருப்பவர்கள் வாவுபலி பொருட்காட்சி ஏலத்தில் கலந்து கொள்ள அனுமதி இல்லை.

32) 98-வது வாவுபலி பொருட்காட்சியில் பக்கக்காட்சி எடுக்கும் நபர் நகராட்சி அலுவலர்கள் நகராட்சி ஊழியர்கள் மற்றும் நகர்மன்ற தலைவர், துணைத்தலைவர் மற்றும் நகர்மன்ற உறுப்பினர்கள் பக்கக்காட்சியில் இடம் பெற்றுள்ள அனைத்து இனங்களையும் அவர்கள் விரும்பும் தேதியில் ஒருகுடும்பத்திற்கு (5 நபர்கள்) ஒருமுறை கட்டாயம் பார்வையிட அனுமதிக்க வேண்டும். பொருட்காட்சி துவங்கும் நாளில் அதற்கான அனுமதி வழங்க வேண்டும்.

33) வாவுபலி பொருட்காட்சி திடலில் சேகரமாகும் குப்பைகளை குத்தகைதாரர் சொந்த செலவில் அப்புறப்படுத்திட வேண்டும். மேலும் கைவினை பொருட்கள் மற்றும் விவசாய பொருட்கள் கண்காணிக்க நபர் நியமிக்கவும், பொருட்காட்சி நடைபெறும் நாள் முதல் முடிவுபெறும் நாள் வரையுள்ள மின்கட்டணம் குத்தகைதாரரை சார்ந்தாகும். மேலும் பொருட்காட்சி நடைபெறும் நாள் முதல் முடிவு பெறும் நாள் வரையில்

தேவையான பணியாளர்களை (பாதுகாவலர்கள்) நியமித்து ஊதியம் வழங்க வேண்டிய பொறுப்பு உரிமதாரரையே சாரும்.

அ.கு.- மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும்.

ந.க.எண்.1290/2023/அ2.

தீர்மானம் எண் 519 - அனுமதிக்கப்பட்டது

பொருள் எண்.12

குழித்துறை நகராட்சியால் ஆண்டுதோறும் ஆடி அமாவாசையை முன்னிட்டு வாவுபலி பொருட்காட்சி நிரந்தரமாக நடத்திட நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கும் (ந.நி.3) துறை அரசாணை எண்.34, நாள் 22-06-2000-ன்படி நிரந்தர அனுமதி ஆணை வழங்கப்பட்டுள்ளது. அதன்பேரில் நடைபெறவுள்ள 98-வது வாவுபலி பொருட்காட்சி 03-08-2023 முதல் 22-08-2023 வரை நடத்தவும் மற்றும் வாவுபலி பொருட்காட்சியில் நுழைவு கட்டணம் வசூல் நகராட்சியின் மூலம் மேற்கொள்ளவும், நுழைவு கட்டணம் பெரியவர் ரூ.20/- மற்றும் சிறியவர் ரூ.10/- வீதம் வசூலித்திடவும்,. தற்போது நடைபெறவுள்ள 98-வது வாவுபலி பொருட்காட்சியில் வரிசை எண்.1 முதல் 11 வரையுள்ள இனங்களையும் ஒரே இனமாக சேர்த்து பொது ஏலம் விட மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

| | |
|---|---|
| 1 | நகராட்சி குறிப்பிடும் இடத்தில் மட்டும் பக்கக் காட்சி அமைத்து நடத்தும் உரிமம் |
| 2 | பொருட்காட்சி திடலில் நகராட்சி குறிப்பிடும் இடத்தில் ஒலி பெருக்கியில் மட்டும் விளம்பரம் செய்யும் உரிமம் |
| 3 | நகராட்சி குறிப்பிடும் இடத்தில் ஐஸ் மற்றும் ஐஸ்கிரீம் மட்டும் விற்பனை செய்யும் உரிமம் |
| 4 | நகராட்சி குறிப்பிடும் இடத்தில் உணவு விடுதி நடத்தும் உரிமம் |
| 5 | நகராட்சி குறிப்பிடும் இடத்தில் அப்பளம் பஜ்ஜி கடை நடத்தும் உரிமம் |
| 6 | நகராட்சி குறிப்பிடும் இடத்தில் பாப்கான் விற்பனை செய்யும் உரிமம் |
| 7 | நகராட்சி குறிப்பிடும் இடத்தில் பானிபூரி விற்பனை செய்யும் உரிமம் |
| 8 | பொருட்காட்சி திடலுக்கு வெளியில், தபால் நிலையம் முன்பக்கம் உள்ள 11 கடைகள் அமைத்து விற்பனை செய்யும் உரிமம் கடை 1-ன் அளவு 7'x 5' |
| 9 | பொருட்காட்சி திடலுக்கு வெளியில், பொதுப்பணி துறை பக்கம் 9 கடைகள் அமைத்து விற்பனை செய்யும் உரிமம் கடை 1-ன் அளவு 7' x 6' |
| 10 | வேலுத்தம்பி திடலில் அமைக்கப்பட்டுள்ள 20 கடைகள் அமைத்து விற்பனை செய்யும் உரிமம் கடை 1-ன் அளவு 8'x 6' |
| 11 | பொருட்காட்சி திடலுக்குள் உள்ள 30 கடைகள் அமைத்து விற்பனை செய்யும் உரிமம் கடை 1-ன் அளவு 10'x 9' |

அ.கு.- 1) மின்கட்டணம், தீயணைப்பு கட்டணம் மற்றும் இதர செலவினங்கள் குத்தகைதாரரை பொறுத்ததாகும்.

2) மேற்படி வாவுபலி பொருட்காட்சி நடத்திட நகராட்சியில் மேற்கொள்ளப்படும் நடவடிக்கைக்கு ஏற்படும் செலவினத்திற்கும் மன்றம் அனுமதி வேண்டப்படுகிறது.

ந.க.எண்.1290/2023/அ2.

தீர்மானம் எண் 520 - அனுமதிக்கப்பட்டது

பொருள் எண்.13

குழித்துறை நகராட்சியின் தலைமை நீரேற்று நிலையத்தில் உள்ள மூன்று மின் இணைப்புகள் முறையே

181-004-1185 (64.76KW)

181-004-572 (61.72KW )

181-004-1 (51KW) உள்ளதை மாற்றி ஒரு மின் இணைப்பு மட்டும் பயன்படுத்த தெரிவிக்கப்பட்டது. அதன்படி 181-004-1185 மின் இணைப்பின் பளுதிறன் 64.76KW-லிருந்து 150KW ஆக உயர்த்தி பெற்றிடவும் மீதி இரண்டு மின் இணைப்புகளை துண்டிப்பு செய்திட வேண்டியுள்ளது. மேலும் 181-004-1185 மின் இணைப்பினை LTCT மின் இணைப்பாக மாற்றிடவும் மீதமுள்ள இரண்டு மின் இணைப்பை துண்டிப்பு செய்து அதன் பேனல் போர்டுக்கு 181-004-1185 மின் இணைப்பை பொருத்துவதற்கும் தயாரிக்கப்பட்ட மதிப்பீடு ரூ.7.60-க்கு மன்றத்தின் முன் அனுமதி பெற்று A.S. Power Solution மூலம் வேலை செய்தமைக்கு மன்றத்தின் அனுமதிக்கு.

அ.கு.- பணியின் அவசர அவசியத்தை கருத்தில் கொண்டு மன்றத்தின் முன் அனுமதி பெற்று வேலை மேற்கொண்டமைக்கு மன்றம் ஒப்புக்கொள்ளலாம்.

ந.க.எண்.

தீர்மானம் எண் 521 - அனுமதிக்கப்பட்டது

பொருள் எண்.14

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களின் சட்டமன்ற பேரவை விதி எண்.110-ன்கீழ் வெளியிடப்பட்ட அறிவிப்பு நாள் 07-05-2022-ன்படி மாநகராட்சி, நகராட்சி, ஊரக கிராம ஊராட்சி மற்றும் மலைப்பகுதிகளில் செயல்படும் அரசு பள்ளிகளில் 1 முதல் 5-ம் வகுப்பு வரையுள்ள குழந்தைகளுக்கு காலை உணவு திட்டத்தினை 2022-2023-ம் ஆண்டில் முதல் கட்டமாக செயல்படுத்திட தெரிவிக்கப்பட்டதின் அடிப்படையில் இந்நகராட்சியில் உள்ள அரசு பள்ளிகள் மற்றும் அதை சுற்றியுள்ள பேரூராட்சிகளில் பயிலும் 1 முதல் 5-ம் வகுப்பு வரையுள்ள குழந்தைகளுக்கும் காலை சிற்றுண்டி வழங்கிட தெரிவிக்கப்பட்டது. அதன்படி (குழித்துறை நகராட்சி பகுதியில் அமைந்துள்ள 6 அரசு பள்ளிகள், களியக்காவிளை பேரூராட்சியின்கீழ் 3 அரசு பள்ளிகளும், பாகோடு பேரூராட்சியின்கீழ் 6 அரசு பள்ளிகளும், நல்லூர் பேரூராட்சியின்கீழ் 3 அரசு பள்ளிகளும், உண்ணாமலைகடை பேரூராட்சியின்கீழ் 4 அரசு பள்ளிகளும்

ஆகமொத்தம் 22 அரசுப்பள்ளிகளில் 1 முதல் 5 வரை பயிலும் குழந்தைகளுக்கு காலை சிற்றுண்டி வழங்க) 22-05-2023 அன்று வருடத்திற்கு ரூ.38.00 இலட்சம் மதிப்பீட்டில் ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டது. பெறப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகளில் விவரம் கீழ்வருமாறு.

1) Happy Event Management (Raja Rexin ), Kollencode
2) Brothers Kitchen (Prathap Kumar), Kulasekaram

மேற்க்கண்ட இரண்டு ஒப்பந்ததாரர்களின் விலைப்புள்ளி (Price Bid) 23-05-2023 அன்று திறக்கப்பட்டு ஒப்புநோக்கு பட்டியல் தயார் செய்யப்பட்டதின் விவரம் கீழ்வருமாறு.

1) Happy Event Management (Raja Rexin ), Kollencode மதிப்பீட்டை விட 13.73% கூடுதல்.
2) Brothers Kitchen (Prathap Kumar), Kulasekaram மதிப்பீட்டை விட 0.39% குறைவு.

வரப்பெற்ற இரண்டு விலைப்புள்ளிகளில் குறைந்த விலைப்புள்ளி கொடுத்துள்ள Brothers Kitchen (Prathap Kumar), Kulasekaram என்பவரின் விலைப்புள்ளியினை ஏற்று LOA (Letter of Acceptence) வழங்கி கூடுதல் வைப்புத்தொகை 1% ரூ.38000/- செலுத்திய பின் பணி உத்தரவு வழங்கிட மன்றத்தின் அனுமதிக்கும், முடிவிற்கும்.

அ.கு..- மேற்படி பணி அரசு பணியாக இருப்பதால் பணியின் அவசர அவசியத்தை கருத்தில் கொண்டு நகர்மன்றத்தலைவரின் முன் அனுமதி பெற்று LOA வழங்கியதை மன்றம் அனுமதிக்கலாம்.

ந.க.எண்.1967/2023/இ1.

தீர்மானம் எண் 522 - அனுமதிக்கப்பட்டது

<u>பொருள் எண்.15</u>

குழித்துறை நகராட்சி பகுதியில் தெருக்களில் சுற்றிதிரியும் தெரு நாய்களை கருத்தடை அறுவை சிகிட்சை மற்றும் வெறிநாய் காப்பு தடுப்பூசி செலுத்தும் பணியினை “ஜீவ காருண்யா விலங்குகள் நல அறக்கட்டளை” மூலம் மேற்கொள்ளவும், அதற்காக ஏற்படும் உத்தேச செலவினத்தொகை ரூ.3,00,000/-க்கும் மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

அ.கு..- மன்றம் முடிவு செய்யலாம்.

ந.க.எண்.3459/2022/H1.

தீர்மானம் எண் 523 - அனுமதிக்கப்பட்டது

<u>பொருள் எண்.16</u>

நகர்மன்றத்தீர்மானம் எண்.458, நாள் 24-03-2023 பொது சுகாதார பணிகளுக்கு தேவையான பொருட்கள் வாங்கிட தீர்மானிக்கப்பட்டதின்பேரில், தேவையான பொருட்களை வாங்கி வழங்கிட 03-05-2023-ல் ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டதில் கீழ்க்கண்டவாறு இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் பெறப்பட்டது.

1) ரேவதி டிரேடர்ஸ்
   (i ) பிளிச்சிங் பவுடர் - 1 கிலோ - ரூ.42/-
   (ii ) சுண்ணாம்பு - 1 கிலோ - ரூ.9/-
2) G.K.K. டிரேடர்ஸ்
   (i ) பிளிச்சிங் பவுடர் - 1 கிலோ - ரூ.59/-
   (ii ) சுண்ணாம்பு - 1 கிலோ - ரூ.13/-

பெறப்பட்ட இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் வரிசை எண்.1-ல் கண்ட ரேவதி டிரேடர்ஸ் என்ற நிறுவனத்தின் ஒப்பந்தப்புள்ளி குறைவாகவுள்ளது. எனவே குறைந்த ஒப்பந்தப்புள்ளியினை ஏற்க மன்றம் அனுமதிக்கலாம்.

அ.கு.- மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும்.
ந.க.எண்.3655/2021/H1

தீர்மானம் எண் 524 - அனுமதிக்கப்பட்டது

<u>பொருள் எண்.17</u>

குழித்துறை நகராட்சி 2022-2023-ற்கான சொத்துவரி/ காலிமனைவரி படிவங்கள் அச்சிடப்பட்ட வகைக்கு ரூ.32750/-க்கான செலவினப்பட்டியல் பெறப்பட்டுள்ளது. மேற்படி தொகையினை "The Melagaram Society Workers Industrial Co-operative Ltd.." நிறுவனத்திற்கு வழங்கிட மன்றத்தின் அனுமதிக்கு சமர்ப்பிக்கப்படுகிறது.

அ.கு.- மன்றம் அனுமதிக்கலாம்.
ந.க.எண்.969/2022/அ1.

தீர்மானம் எண் 525 - அனுமதிக்கப்பட்டது

<u>பொருள் எண்.18</u>

குழித்துறை நகராட்சிக்கு சொந்தமான கடைகள் மற்றும் குத்தகை இனங்களுக்கு பொது ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி 28-04-2023-ல் கோரியதில் ஏலத்தில் எவரும் கலந்து கொள்ளவில்லை. கீழ்கண்டவாறு ஒப்பந்தப்புள்ளிகள் மட்டுமே பெறப்பட்டுள்ளது.

I. பி.பி.முனுசாமி வணிகவளாக கடை எண்.G10

| வ. எண் | ஒப்பந்ததாரர் பெயர் | வைப்புத் தொகை ரூபாய் | மாத வாடகை தொகை |
|---|---|---|---|
| 1 | A. ஜாஸ்பின் கெஜிலா, கண்ணக்கோடு | 50000/- | 5300/- |
| 2 | T.L. ஜோ, கண்ணக்கோடு | 50000/- | 4500/- |
| 3 | எஸ்.கே. கெபின், வெட்டுவெந்நி | 100000/- | 13000/- |
| 4 | சி. பிரதீபா, பேரை, பாகோடு | 50000/- | 16615/- |

| | | | |
|---|---|---|---|
| 5 | எம். பிரேம் அன்சிலின்,<br>தெரும்புவிளை, பாகோடு | 50000/- | 17301/- |

II. மார்த்தாண்டம் பேருந்து நிலையம் பழைய கடை எண்.1

| | | | |
|---|---|---|---|
| 1 | எ. ராஜம்மாள்,<br>விரிகோடு | 50000/- | 3200/- |
| 2 | ஜே. பெனடிக்ட்<br>கொடுங்குளம் | 50000/- | 3850/- |
| 3 | அஜிதா,<br>நல்லூர் | 50000/- | 5150/- |
| 4 | அ. ராஜன்,<br>திருவட்டார் | 50000/- | 3600/- |

III. மார்த்தாண்டம் பேருந்து நிலையம் கடை எண். 7

| | | | |
|---|---|---|---|
| 1 | அ. ராஜன்,<br>திருவட்டார் | 50000/- | 3600/- |

IV. கருங்கல் சாலை கடை எண்.1

| | | | |
|---|---|---|---|
| 1 | வி. தேவராஜன், | 50000/- | இல்லை |

V. கருங்கல் சாலை கடை எண்.7

| | | | |
|---|---|---|---|
| 1 | ஆர். ஜீவா,<br>சிதறால் | 50000/- | 7000/- |

வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளில் வரிசை எண்.1-ல் கண்டுள்ள G10 கடையானது 2022-2023-ல் மாத வாடகையாக ரூ.10350/- நிர்ணயம் செய்யப்பட்டிருந்தது.

வரிசை எண்.II-ல் கண்டுள்ள பேருந்து நிலைய கடை எண்.1 2022-2023-ல் ரூ.5500/-க்கு வாடகை நிர்ணயம் செய்யப்பட்டிருந்தது.

வரிசை எண்.III-ல் கண்டுள்ள பேருந்து நிலைய கடை எண்.7 2022-2023-ல் ரூ.5500/-க்கு வாடகை நிர்ணயம் செய்யப்பட்டு செயல்பட்டு வந்தது.

வரிசை எண். IV-ல் கண்டுள்ள கருங்கல் சாலை கடை எண்.1 ரூ.12075/-க்கு செயல்பட்டு வந்தது.

வரிசை எண். V-ல் கண்டுள்ள கருங்கல் சாலை கடை எண்.1 ரூ.11000/-க்கு செயல்பட்டு வந்தது.

வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கு முடிவிற்கும்.

அ.கு.- மன்றம் முடிவு செய்யலாம்.
ந.க.எண்.3066/2021/அ2.

தீர்மானம் எண் 526 (I) - அனுமதிக்கப்பட்டது
தீர்மானம் எண் 526 (II) - அனுமதிக்கப்பட்டது

தீர்மானம் எண் 526 (III) - மறுஒப்பந்தப்புள்ளி கோரலாம்
தீர்மானம் எண் 526 (IV) - மறுஒப்பந்தப்புள்ளி கோரலாம்
தீர்மானம் எண் 526 (V) - மறுஒப்பந்தப்புள்ளி கோரலாம்

<u>பொருள் எண்.19</u>

குழித்துறை நகராட்சிக்கு சொந்தமான வாகனம் TN75P.1813-க்கு 2023-ம் ஆண்டிற்கு தகுதி சான்று பெற உத்தேச மதிப்பீடு ரூ.1,33,000/-க்கு நகர்மன்றத் தீர்மான எண்.505, நாள் 28-04-2023-ன்படி மன்றம் ஒப்புதல் வழங்கியதின் அடிப்படையில் 23-05-2023-ல் ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டது. இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெற்றது. அதன் விபரம் கீழ்வருமாறு உள்ளது.

1) அக்ஷயா மோட்டார்ஸ் மதிப்பீட்டு விலை விகிதம்
2) கணேஷ் மோட்டார்ஸ் மதிப்பீட்டை விட 7.68% அதிகம்

வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளில் குறைந்த ஒப்பந்தப்புள்ளி கொடுத்துள்ள அக்ஷயா மோட்டார்ஸ் நிறுவனத்தில் ஒப்பந்தப்புள்ளியினை ஏற்க மன்றம் பார்வையிட்டு முடிவு செய்யலாம்.

<u>அ.கு.-</u> மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும்.
ந.க.எண்.2795/2017/இ1.

தீர்மானம் எண் 527 - அனுமதிக்கப்பட்டது

<u>பொருள் எண்.20</u>

குழித்துறை நகராட்சியின் 2022-2023-ம் ஆண்டிற்கான ஆட்சியமைப்பு, பணியமைப்பு நகர்மன்ற கூட்டங்கள், திட்டப்பணிகள், பொதுசுகாதாரம், குடிநீர் பிரிவு, வருவாய் இனங்கள் உள்ளடக்கிய நிர்வாக அறிக்கை மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் சமர்ப்பிக்கப்படுகிறது.

அ.கு.- நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர், திருநெல்வேலி அவர்களின் அலுவலகத்தில் உடனடியாக கேட்டுக்கொண்டதற்கிணங்க நகர் மன்ற தலைவரின் முன் அனுமதி பெற்று வழங்கியதையும் மன்றம் அனுமதிக்கலாம்.
ந.க.எண்.1289/2023/சி1.

தீர்மானம் எண் 528 - அனுமதிக்கப்பட்டது

நகர்மன்றத்தலைவர்,
குழித்துறை நகராட்சி.